**O.S. No. 189/2017**

**Date: 13.08.2025**

பி. **வா,சா. 1 சுப்பையா**

**4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தபசில் சொத்தை 4 ம் பிரதிவாதிக்கு நான் தான் கிரயம் கொடுத்தேன் என்றால் சரிதான். வழக்கை தாக்கல் செய்த வாதி என்னுடன் பிறந்த இளைய சகோதரர் ஆவார், என்னிடம் காட்டப்டும் 16.05.1995 தேதிய ஆவணங்கள் எனக்கும் என் தம்பிக்கும் இடையில் ஏற்பட்டது என்றால் சரிதான். 16.05.1995 தேதிய ஆவணம் பதிவு செய்யப்படாத பாகப் பிரிவினை ஆவணம் பி. வா. சா. ஆ, 3 ஆகும். (பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் வாதி தரப்பில் குறியீடு செய்ய ஆட்சேபணை செய்யப்பட்டது. ஆட்சேபணைக்கு உட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்பட்டது. ) தபசில் கண்ட சொத்து என் மனைவி கோமதி என்பவரின் நகையை விற்று வாங்கப்பட்ட சொத்து. கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்பே எனக்கு தனிப்பட்ட பட்டா உண்டு என்றால் சரிதான். எனது மனைவியின் நகையை விற்று வாங்கப்பட்ட சொத்து என்பதால் தான் எனது அப்பா இந்த சொத்தை எனது தனிப்பட்ட சொத்தாக விட்டு விட்டார் என்றால் சரிதான். 16.03.1982 தேதியில் எனக்கு என் தந்தையார் ஒரு ஆவணம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது தான் மேற்படி ஆவணம் என்றால் சரிதான். 16.03.1982 தேதி அன்று 1 ம் பிரதிவாதிக்கும், வாதிக்கும் மேற்படி நபர்களின் தந்தை எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்படாத விருப்புறுதி ஆவணம் பி. வா. சா. ஆ, 4 ஆகும். (பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் வாதி தரப்பில் குறியீடு செய்ய ஆட்சேபணை செய்யப்பட்டது. ஆட்சேபணைக்கு உட்பட்டு ஆவணம்

குறியீடு செய்யப்பட்டது. ) அதன் பின்பு தனித் தனியாக அனுபவித்து வரும்போது என் தம்பியான வாதி பி,,வா, சா, ஆ, 3 ஆவணம் பஞ்சாயத்தார் முன்னிலையில் பெறப்பட்டது. அதன் பின்பு நான் அனுபவித்து வந்த சொத்தில் தான் 4ம் பிரதிவாதிக்கு 08.02.1996 கிரயம் கொடுத்தேன் என்றால் சரிதான். இந்த சொத்தினை 4ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுக்கும் போது மானவாரி தரிசு நிலமாக தான் இருந்தது என்றால் சரிதான். இந்த தபசு சொத்திற்கு மேல்புறம் முத்தையா தேவருக்கு ஏற்கனவே சொத்து இருந்து வந்தது. அந்த சொத்தில் கிணறு இருந்து வந்தது என்றால் சரிதான். மேற்படி அவருக்கு பாத்தியப்பட்ட கிணற்றிலிருந்து நீர் கொண்டு வந்து தான் எழுமிச்சை பயிரிடுகிறார் என்றால் சரிதான். எழுமிச்சை பயிரிட்டு 20 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கும் என்றால் இருக்கும். மேற்படி இடத்தில் 4ம் பிரதிவாதி ஆழ்துளைக்கிணறு போட்டுள்ளார் என்றால் கேள்விபட்டேன். 08.02.1996 கிரயம் வாங்கியதில் இருந்து 4ம் பிரதிவாதி தான் பயிரிட்டு வந்துள்ளார் என்றால் சரிதான். நான் எழுதிக் கொடுத்த ஆவணத்தில் சர்வே எண் 437 க்கு பதிலாக 492 என்று தவறுதலாக ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கொடுத்த சர்வே எண் 437/2 யை தான் 4ம் பிரதிவாதி இன்று வரை அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். இந்த சொத்தை எனது தகப்பனார் வாங்கியதில் இருந்தே வாதிக்கு எவ்வித உரிமையும் இருந்திருப்பது கிடையாது என்று சொன்னால் சரிதான். வாதி 40 வருட காலமாக ஊட்டியில் தான் நிரந்தர குடியிருப்பு இருந்து வருகிறது. தற்போது 3 ஆண்டுகளாக சொந்த கிராமத்தில் குடியிருந்து வருகிறார். வாதிக்கு எந்தவிதமான சொத்தும் கிடைக்ககூடியது என்றால் சரிதான்.